

# FEDERATION OF ALL INDIA REAL ESTATE ASSOCIATION

Reg.No.484/2012

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

**Dr. A.HENDRY**
Founder - National President

www.faira.co.in
73052 58889/fairadmn@gmail.com

FAIRA-

FAIRA

FAIRA கடித எண்: 002/2025 | தேதி: 11.01.2025

பெறுநர்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எமது பணிவான வணக்கங்கள்...

உலகின் தலைசிறந்த காவல்துறையென கருதப்படும் ஸ்காட்லாந்து யார்டு காவல்துறைக்கு இணையாக திகழும் தமிழ்நாடு காவல்துறையினை தங்களின் சீரிய தலைமையின் கீழ் வழிநடத்தி, தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை திறம்பட கையாண்டு இந்தியாவின் பாதுகாப்பான மாநிலம் என அனைவரும் போற்றும் வண்ணமும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையினை பின்பற்றியும், நாடு போற்ற நல்லாட்சி புரிந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் மற்றும் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் சார்பில் உளம் நிறைந்த பாராட்டுக்களையும், நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் தமிழகத்தில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் தாங்கள் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருவதன் காரணமாக இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் 40000 தொழில் நிறுவனங்கள் உள்ளது. மேலும் தொழில் தொடங்குவது, உற்பத்தி, வேலை வழங்குவது, வருவாய் போன்றவற்றிலும் சிறந்த மாநிலமாக தமிழகம் முதலிடத்தில் உள்ளதோடு, தொழில் தொடங்குவதற்கு இந்தியாவிலேயே மிகவும் பாதுகாப்பான மாநிலமாக தமிழகம் விளங்குகிறதென்றால் அது மிகையாகாது.

மேலும் தங்களின் வழிகாட்டுதலின்படி சமீபத்தில் தமிழ் நாட்டின் தொழில்துறை அமைச்சரான மாண்புமிகு டி.ஆர்.பி ராஜா அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்திட்டங்களால் தமிழ்நாடு 10 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளது எனவும், இதன் காரணமாக சுமார் 31 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தது மிகவும் பெருமைக்குரியது.

இத்தகைய பெருமைக்குரிய நம் மண்ணில், சமீபத்தில் தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரில் பள்ளிக்கரணையில் கீர்த்தி புரமோட்டர்ஸ் எனும் கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர் திரு.A.கமலஹாசன் அவர்கள் கடந்த 01.01.2025-ஆம் தேதியன்று சமூக விரோதிகளால் (குண்டர்களால்) அவரது அலுவலகத்தில் வைத்தே கொலைவெறி தாக்குதலுக்குள்ளாகி, அவரது அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்ட சம்பவமானது தொலைக்காட்சிகள், சமூக வலைதளங்கள் மற்றும் பத்திரிகை செய்திகளின் வாயிலாக வெளியாகி தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிய மற்றும் தொடங்க நினைக்கும் தொழில் அதிபர்களை மிகுந்த அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

காரணம் இந்த கொலைவெறி தாக்குதல் சம்பவத்திற்கு பிறகு தொழில் முனைவோர்கள் பாதுகாப்பு தற்போது கேள்விக்குறியாகி தொழிலதிபர்களிடையே ஒருவித அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாட்டில் சமீபகாலமாக பெரும்பாலான நில வணிகத்தில் (ரியல் எஸ்டேட் தொழிலில்) சமூக விரோத செயல்களில் ஈடுபடும் குண்டர்களின் தலையீடு அதிகமாக உள்ளது. யாருக்கு நிலங்களை விற்க வேண்டும் என்ன விலைக்கு விற்க வேண்டும் என்பது தொடங்கி அது சம்பந்தப்பட்ட அனைத்தையும் தீர்மானிப்பது அரசியல் பின்புலம் கொண்ட ஒரு சில குண்டர்களின் கையில் தான் உள்ளது. இதற்கு சம்மதிக்க மறுக்கும் நில உரிமையாளர்கள் மிரட்டப்படுவதுடன் கொலைவெறி தாக்குதலுக்கும் ஆளாகி, அவர்களின் உயிருக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையும், மேலும் அவர்களது சொத்துக்களை சேதப்படுத்துவது கபாலீகரம் செய்வது, சூறையாடுவது, அபகரிப்பது போன்ற சம்பவங்களும், ரியல் எஸ்டேட் கொலைகளும் ஆங்காங்கே அரங்கேறி வருகின்றன.

அந்த வகையில் மேற்கூறிய திரு.A.கமலஹாசன் அவர்களுக்கும் நடைபெற்ற இந்த கொலைவெறி தாக்குதலுக்கு முக்கிய காரணியாக விளங்குவது வீடு விற்பனை சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினை தான்.

மேற்கண்ட கொலை வெறி தாக்குதல் சம்பந்தமாக மாண்புமிகு முதல்வராகிய தங்களின் மேலான கவனத்திற்கு..

திரு.A.கமலஹாசன் அவர்கள் FAIRA கூட்டமைப்பில் 7வது குழுவின் மாநில பொருளாளராக அங்கம் வகித்து வருகிறார்.

திரு.A.கமலஹாசன் அவர்கள் பள்ளிக்கரணையில் எண்:8B, காமகோட்டி நகர், பள்ளிக்கரணை, சென்னை-600100 என்கின்ற விலாசத்தில் அமைந்துள்ள “கீர்த்தி முருகாஸ்” எனும் இரண்டு தளங்கள் கொண்ட அடுக்குமாடி கட்டிடத்தின் முதல் தளத்தில் Flat No:F2-வில் கீர்த்தி புரமோட்டர்ஸ் எனும் கட்டுமான நிறுவனத்தை கடந்த 2010ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறார்.

மேலும் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அமைந்துள்ள கீர்த்தி முருகாஸ் கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் முறையே S1, S2, & S3 என மூன்று வீடுகள் (Flats) உள்ளன. அதில் Flat No: S2 என்கின்ற வீட்டினை திருமதி.ரம்யா சுதர்சன் என்பவருக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு விற்பனை செய்துள்ளார்.

இந்நிலையில் இலங்கை நாட்டினை சேர்ந்த திரு.செல்வகுமார் என்பவர் Flat No:S2 வீட்டிற்கு திரு.ரம்யா சுதர்தன் அவர்களுக்கு சொந்தமான வீட்டினை கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு குடி வந்துள்ளார். மேலும் தான் குடியிருந்து வரும் Flat No:S2 வீட்டினை அவர் வாங்குவதற்கும் முயன்று அதற்கான பணத்தையும் தவணை முறையில் செலுத்தி வருவதாக தெரிகிறது. இதன் காரணமாக இந்த அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் அனைவரிடத்திலும் தான் இந்த வீட்டின் உரிமையாளர் என்று கூறி வந்துள்ளார். மேலும் வீட்டிற்கு குடி வந்த நாள் முதலே அவரின் செயல்பாடுகள் அவர் வசிக்கும் இரண்டாவது தளத்தில் மீதமுள்ள Flat No: S1 & S3 வீடுகளை யாரையும் வாங்க விடாமல் தடுத்து நிறுத்தி, குறைந்த விலைக்கு தான் வாங்கி கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில், இந்த வீட்டிற்கு குடி வந்த நாள் முதல் அவரின் செயல்பாடுகள் மிகவும் மோசமாகவும், மிகவும் கீழ்த்தரமாகவும், தரங்கெட்ட தனமாகவும், மற்றும் அங்கு வசிப்பவர்களுக்கு ஒருவித அச்சத்தையும் உயிர் பயத்தையும் ஏற்படுத்தும் வகையிலும் இருந்துள்ளது.

மேலும் திரு.செல்வகுமார் என்பவர் பல்வேறு சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும், இவர் மீது ஏற்கனவே பல பேரிடம் பண மோசடி, அடிதடி, சொத்துகளை அபகரித்தல், ஆள்மாறாட்டம், கட்டப் பஞ்சாயத்தென பல்வேறு வழக்குகள் நீதிமன்றங்களிலும் மற்றும் காவல் நிலையங்களிலும் நிலுவையில் உள்ளதாக விசாரணையில் தெரிய வருகிறது.

அது மட்டுமல்லாமல் செல்வகுமார் அடிக்கடி தனது நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வந்து அவர்களுடன் வீட்டின் மொட்டை மாடியில் மது அருந்திவிட்டு பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில், கத்தி கூச்சலிடுவது, அருவருக்கத்தக்க வகையில் ஆபாசமாக பேசுவது, அக்கம் பக்கம் உள்ள வீடுகளில் பொருள்களை வீசி எறிவது போன்ற பல மோசமான செயல்களையும் தொடர்ந்து செய்து வந்துள்ளார். மேலும் இரண்டாவது தளத்தில் உள்ள S3 வீட்டின் உரிமையாளர் திரு....... அவர்கள் தங்கள் வீட்டை விற்பனை செய்து தரக்கோரி திரு.A.கமலஹாசன் அவர்களுக்கு பொது அதிகார ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார்.

மேலும் S1 வீட்டின் உரிமையாளர் திரு.A.கமலஹாசன் அவர்களிடம் நல்ல நண்பர்களாக பார்த்து தன்னுடைய வீட்டை விற்று தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட கட்டிடத்தில் உள்ள மற்ற இரு வீடுகளான முறையே Flat No: S1 & S3 ஆகிய இரண்டு வீடுகளையும் தனக்கு வாடகைக்கு கொடுக்குமாறு திரு.கமலஹாசன் அவர்களை, பல்வேறு சமூக விரோத செயல்களில் ஈடுபடும் திரு.செல்வகுமார் தொடர்ந்து வற்புறுத்தியும் மற்றும் மிரட்டல்கள் விடுத்தும் வந்துள்ளார். அவரின் தரம் கெட்ட செயல்பாடுகளினால் Flat No: S1 & S3 வீடுகளை வாடகைக்கு தருவதற்கு திரு.கமலஹாசன் மறுத்துள்ளார். இதன் காரணமாக திரு.A.கமலஹாசன் மீது மிகுந்த கோபமும். பகையும் கொண்டு அவரை பார்க்கும் பொழுதெல்லாம் மிகவும் ஆபாசமாகவும் கீழ்த்தரமாகவும் தரக்குறைவாகவும் கொலை மிரட்டல் விடும் வகையிலும் திரு.செல்வகுமார் பேசி வந்துள்ளார்.

இந்நிலையில் Flat No: S1 எண் கொண்ட வீட்டினை வழக்கறிஞர் திரு.ஸ்ரீதர் என்பவருக்கு திரு.கமலஹாசன் விற்பனை செய்துள்ளார். இதனையறிந்த திரு.செல்வகுமார் நான் வாடகைக்கு கேட்ட போது தராமல் என்னை கேட்காமல் மேற்கண்ட வீட்டினை நீ எப்படி விற்பனை செய்தாய் என்று மிக ஆவேசமாக பேசி கொலை வெறியோடு திரு.கமலஹாசன் அவர்களை தாக்க முற்பட்டுள்ளார். மேலும் இனி மீதமுள்ள Flat No: S3 வீட்டினை என்னை தவிர வேறு யாரையும் வாங்க விட மாட்டேன் என்று சபதமும் செய்துள்ளார். மேலும் என்னை மீறி Flat No: S3 வீட்டினை வேறு யாருக்கும் வாடகைக்கோ அல்லது விற்கவோ செய்தால் நீ உயிரோடு இருக்க மாட்டாய் என கொலை மிரட்டலும் விடுத்துள்ளார்

மேலும் திரு.கமலஹாசன் அவர்கள் Flat No: S3 வீட்டினை விற்பதற்கான நடவடிக்கைகள் எடுத்து வருவதை அறிந்த திரு.செல்வகுமார் அவர்கள் கடந்த 31.12.2024 அன்று தான் வளர்த்து வந்த நாயை மற்றவர்களை பயமுறுத்தும் வகையில் Flat No: S3 வீட்டின் முன் வாயிலில் அமைக்கப்பட்டுள்ள (Grill Gate) இரும்பு கதவில் கட்டி வைத்து அந்த வீட்டினை யாரும் வாங்காத வண்ணம் பயமுறுத்தும் வகையில் கட்டி வைத்துள்ளார். இதன் காரணமாக Flat No: S3 வீட்டினை வாங்குவதற்காக பார்க்க வந்த தம்பதியினர் பயந்து சென்று விட்டனர்.

கடந்த 31-12-2024 தேதியன்று மதிய வேளையில் திரு.செல்வகுமார் மற்றும் அவருடைய ஆறு நண்பர்கள் வீட்டின் மொட்டை மாடிக்கு சென்றுள்ளார். சிறிது நேரம் கழித்து திரு.கமல்ஹாசன் அவர்கள் மொட்டை மாடிக்கு சென்று பார்த்த பொழுது செல்வகுமார் மற்றும் அவரின் அடியாட்கள் அந்தக் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் அனைவருக்கும் பொதுவான மொட்டை மாடியை ஆக்கிரமித்து Roofing Sheet போடுவதற்கான பணிகளை மேற்கொண்டு உள்ளார். இதனை கண்ட திரு.கமலஹாசன் அவர்கள், திரு.செல்வகுமாரிடம் மொட்டை மாடி அனைவருக்கும் பெதுவானது. இங்கு நீங்கள் Roofing Sheet போடுவது முறையல்ல என்று பணிவுடன் எடுத்துக் கூறியுள்ளார் .ஆனால் திரு.செல்வகுமார் நான் அப்படித்தான் செய்வேன், உன்னால் ஆனதை பார் என்று கோபமாகவும் ஆபாச வார்த்தைகளால் அநாகரீகமாக பேசியதோடு, மீறி தடுத்தால் உன் உயிர் இருக்காது என்று கூறி கொலை மிரட்டல் விடுத்திருக்கிறார்.

இதனை தொடர்ந்து கடந்த 01-01-2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தன்று Flat No: S3 குடியிருப்பை வாங்குவதற்காக நேரில் பார்வையிட வாடிக்கையாளர் வந்திருந்தனர். அவர்களையும் வீட்டினை வாங்கவிடாத வண்ணம் திரு.செல்வகுமார் மிரட்டியுள்ளார்.





இந்நிலையில் திரு.A.கமலஹாசன் அவர்கள் 01-01-2025 புத்தாண்டு தினத்தன்று மதியம் அவருடைய அலுவலகத்திற்கு சென்றுள்ளார். தனது உதவியாளர் வாசுவை மொட்டை மாடிக்குச் சென்று அங்கு உள்ள நிலவரத்தை பார்த்து வர சொல்லியுள்ளார். அவரது உதவியாளர் வாசு அவர்கள் மொட்டை மாடிக்கு சென்று பார்த்த பொழுது திரு.செல்வகுமார் தான் வளர்க்கும் நாயை அவர் மீது ஏவி விட்டதோடு மட்டுமல்லாமல் அவரை கொலை வெறியுடன் அடித்து உதைத்து சட்டையை கிழித்து தரதரவென்று கீழே திரு.கமலஹாசனின் அலுவலகத்துக்கு இழுத்துக் கொண்டு சென்றுள்ளார். மேலும் திரு.கமலஹாசன் அவர்களையும் ஆபாச வார்த்தைகளால் திட்டியது மட்டுமல்லாமல் மொட்டை மாடியில் நான் ரூப் சீட் போட்டால் உனக்கென்ன என்று கூறி திரு.செல்வகுமார் மற்றும் அவரது கூட்டாளி தமிழ்ச்செல்வன் மற்றும் பெயர் தெரியாத ஐந்து பேர் (தாக்கியவர்களை அடையாளம் காண முடியும்) சேர்ந்து கொலை செய்யும் நோக்கத்தோடு அவரை கண்மூடித்தனமாக முகம், தலை, தாடை, கழுத்து, நெஞ்சு, கண், காது என எல்லா இடத்திலும் கண்மூடித்தனமாக அடித்தும், உதைத்தும், முகத்தில் குத்தியும் சரமாரியாக கொலைவெறி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் திரு.கமலஹாசன் அவர்களின் உடல் முழுவதும் ஏற்பட்ட பலத்த காயங்களின் காரணமாக நிலைகுலைந்து மயங்கி கீழே விழுந்துள்ளார். இந்நிலையிலும் அவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் திரு.செல்வகுமார் மற்றும் அவரின் கூட்டாளிகள் தொடர்ந்து தாக்கியுள்ளனர். அது மட்டுமல்லாது திரு.கமலஹாசன் அலுவலகத்தில் உள்ள பொருட்கள் அனைத்தையும் அடித்து நொறுக்கி சூறையாடிள்ளனர். நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதல் சம்பவங்களை பார்த்து கொண்டிருந்த Flat No:S3 வீட்டினை வாங்குவதற்காக பார்வையிட வந்த வாடிக்கையாளர்கள் காவல்துறைக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

காவல்துறையினர் வருவதை அறிந்த செல்வகுமார் மற்றும் அவரது கூட்டாளிகள் அந்த இடத்திலிருந்து ஓடி தலைமறைவாகி உள்ளனர்.

காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து நடந்தவற்றை பற்றி விசாரிக்க ஆரம்பித்தபோது திரு.கமலஹாசன் அவர்களுக்கு தாக்குதலினால் ஏற்பட்ட வலி மற்றும் பலத்த காயங்களினால் நடந்தவற்றை கூறுவதற்கு அவர் இயலாத சூழ்நிலையில் இருந்துள்ளார்.

அந்த சூழலில் அவரது உதவியாளர் பி.வாசு 108 எண்ணை தொடர்பு கொண்டு அரசு ஆம்புலன்ஸை வரவழைத்துள்ளார். படுகாயம் அடைந்த நிலையில் இருந்தவரை மேடவாக்கத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு முதலுதவிக்கு அழைத்து சென்றுள்ளார்கள்.

அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் திரு.கமலஹாசன் அவர்களின் உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ள காரணத்தால் நிறைய ஸ்கேன்கள் மற்றும் எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்று கூறி அதற்கான வசதி அங்கு இல்லாத காரணத்தினால் முதலுதவி செய்து விட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அங்கும் மேற்கூறிய வசதிகள் இல்லாத காரணத்தினால் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு போகுமாறு மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். அங்கிருந்து ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் திரு.கமலஹாசன் அவர்களுக்கு ஏற்பட்ட மயக்கம் மற்றும் கடுமையான வலியின் காரணமாக பள்ளிக்கரணையில் உள்ள தனியார் மருத்துவமனையான காமாட்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.




# FEDERATION OF ALL INDIA REAL ESTATE ASSOCIATION

Reg.No.484/2012

No.23/12, Basement, Asian Apartments, 1st Cross Street,
Trustpuram, Kodambakkam, Chennai - 600 024

**Dr. A.HENDRY**
Founder - National President

www.faira.co.in
73052 58889/fairadmn@gmail.com

FAIRA-

FAIRA


இதனைத் தொடர்ந்து கடந்த 01.01.2025 -ம் தேதி இரவு 09:15 மணிக்கு குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணை செய்ய T14 பள்ளிக்கரணை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.P.ரவி அவர்கள் குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு விசாரிக்க, சென்றுள்ளார். பிறகு திரு.கமலஹாசனை அவர்களை கைப்பேசி வாயிலாக தொடர்பு கொண்டு அவர் காமாட்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தகவலை தெரிந்து கொண்டு அதன்படி காமாட்சி மருத்துவமனைக்கு விசாரிக்க சென்று உள்ளார். அங்கு பலத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்த திரு.கமலஹாசன் அவர்களிடமிருந்து வாக்குமூலம் மற்றும் புகாரினையும் பெற்று கொண்டுள்ளார். அந்த புகாரின் அடிப்படையில் கடந்த 02.01.2025-ம் தேதி காலை 11:40 மணிக்கு T14 பள்ளிக்கரணை காவல் காவல் நிலையத்தில் CSR 07/2025 பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசாரணையின் அடிப்படையில் கடந்த 03.01.2025 -ம் தேதி அன்று இரவு 10:00 மணிக்கு மேற்படி புகாரின் மீதுT14 பள்ளிக்கரணை காவல் நிலைய குற்ற எண்: 07/2025 U/S 191, 333, 126(2), 296(b), 118(1), 117(4), 324(4), 351(2) BNS -ல் திரு.செல்வகுமார் மற்றும் அவரது கூட்டாளிகள் ஐந்து பேர் மீது மேற்கூறிய பிரிவுகளில் வழக்கு பதிந்து முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கில் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் மற்ற முக்கிய நபர்கள் தலைமறைவாகியுள்ளனர். மேலும் இந்த குற்ற செயலில் ஈடுபட்டவர்கள் முன் ஜாமின் கோரி செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் மனு செய்துள்ளார்கள். இந்த வழக்கானது 10.01.2025 அன்று செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. நீதிமன்றத்தில் நடைபெற்ற வாதங்களின் அடிப்படையில் திரு. செல்வகுமார் மற்றும் அவரது கூட்டாளிகளின் முன் ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் திரு.செல்வகுமார் தனது அரசியல் செல்வாக்கு, பண பலம் மற்றும் ஆள் பலத்தை கொண்டு அவரும் அவரின் கூட்டாளிகளும் தாங்கள் செய்த இந்த கொடூர சம்பவத்திலிருந்து தப்பித்துக் கொள்ள பல வகையிலும் முயன்று வருவதாக தெரிகிறது. மேலும் திரு.செல்வகுமார் தான் ஈடுபடும் குற்றச் செயல்களிருந்து தன்னை காத்துக் கொள்ள எப்போதும் 25 வழக்கறிஞர்களை தன்னுடன் வைத்துள்ளார்.

எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மேற்கூறிய கொலைவெறி தாக்குதல் சம்பவத்தை தங்களின் மேலான கவனத்தில் கொண்டு, யாராக இருந்தாலும் இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபடுவர்கள் மீது அரசியல், மதம், ஜாதி மற்றும் பொருளாதார அடிப்படையில் பாரபட்சம் காட்டாமல் இரும்பு கரம் கொண்டு அவர்களை அடக்க வேண்டும் எனவும், மேலும் இத்தகைய கொலை பாதக செயல்களை செய்தவர்கள் மீது கடுமையான சட்ட பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க தாங்கள் காவல் துறைக்கு உத்தரவிட வேண்டுமெனவும், தமிழ்நாட்டில் பொதுமக்கள் முதல் தொழிலதிபர்கள் வரை அனைவரும் பாதுகாப்பாக வாழும் வகையில் சட்டம் ஒழுங்கை மேம்படுத்திட வேண்டுமெனவும், மேலும் மேற்கூறிய தாக்குதல் நடத்திய சமூக விரோதிகள் மீது எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கையானது உலகம் முழுவதிலும் இருந்து தமிழ்நாட்டில் முதலீடு செய்பவர்கள் தங்கள் பாதுகாப்பில் தமிழக அரசு மேல் நம்பிக்கை கொள்ளும் வகையில் அமைய வேண்டுமெனவும் பொதுமக்கள் மற்றும் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் சார்பாக தங்களை பணிவுடன் வேண்டுகின்றோம்.

நன்றி!

நகல்

1.உயர்திரு தலைமை செயலாளர் அவர்கள்,

2.உயர்திரு தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்கள்.

3.உயர்திரு தாம்பரம் காவல் ஆணையர் அவர்கள்

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,

[signature]

ஆ.ஹென்றி,
நிறுவனர் – தேசியத் தலைவர்
FAIRA